

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நேற்று (6.8.2023) நடைபெற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ள வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்றார். உடன், தமிழ்நாடு ஆளுநரும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான ஆர்.என். ரவி உள்ளார்.

பஞ்சாயத்து ராஜ் - சமூக அடிப்படையிலான

# அமைப்புகளை ஒன்றிணைக்கும் பயிலரங்கத்தின் நோக்கம் என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.7-

புதுச்சேரி மற்றும் இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட மலை பிரதேசங்களில் பஞ்சாயத்து ராஜ் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு பயனுள்ளதாக அமைந்துள்ளதா? என்று மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் (PRIS) மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளை ஒன்றிணைக்கும் பயிலரங்கின் நோக்கம் என்ன, அந்த ஒருங்கிணைப்பு பயனுள்ளதாக அமைந்துள்ளதா, ஒருங்கிணைந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான மாநிலங்கள் மற்றும் தொகுதிகளைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் என்ன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் (PRIS) மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளை ஒன்றிணைத்து உலகமயமாக்குதல் தொடர்பான பயிலரங்கு குறித்து குறிப்பிட்ட நோக்கங்கள் ஏதேனும் உள்ளனவா என கேள்வி எழுப்பினார்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு பயனுள்ளதாக அமைந்துள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

குடும்பஸ்ரீ தேசிய வள அமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சி மாதிரிகள் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களின் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

ஒருங்கிணைந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான மாநிலங்கள் மற்றும் தொகுதிகளைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களில் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கு பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு உதவியதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

குடிநீர், சுகாதாரம், மருத்துவம், வறுமை ஒழிப்பு, சமூகப் பாதுகாப்பு, பாலின சமத்துவம், தரமான கல்வி, வேலைவாய்ப்பு, நிதி வளர்ச்சி மற்றும் பங்கேற்புத் திட்டமிடல் போன்றவற்றில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான பயிலரங்கின்போது விவாதிக்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் அல்லது உத்திகள் குறித்த விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

இமாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, திரிபுரா, மேகாலயா மற்றும் புதுச்சேரி போன்ற மாநிலங்களுடன் ஒருங்கிணைப்புத் திட்டங்களை விரிவாக்குவது தொடர்பாக கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்த விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

# பெரியகுளத்தில் மாஸ்க் தொழிற்சாலையில் தீ!

பெரியகுளம், ஆக.7-

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே உள்ள லட்சுமிபுரத்தில் நாப்கின் மற்றும் முகக்கவசம் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென தீப்பிடித்து தொழிற்சாலை முழுவதும் தீ பரவியது.

தகவலறிந்து வந்த தேனி மற்றும் பெரியகுளம் தீயணைப்புத்துறை வீரர்கள் நீண்டநேரம் போராடி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் போடியில் இருந்தும் தீயணைப்பு நிலைய வீரர்கள் வரவழைக்கப்பட்டனர். தனியார் டேங்கர் லாரிகளில் நீர்வரவழைக்கப்பட்டு 30க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தொழிற்சாலையில் பரவிய தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் 8 மணிநேரம் போராடி தீயை அணைத்தனர். தீ தொழிற்சாலை முழுவதும் பரவியதால், அங்கு வைக்கப்பட்டிருந்த மூலப்பொருட்கள் பஞ்சு மற்றும் தயார் செய்து வைக்கப்பட்ட நாப்கின், முகக்கவசங்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் எரிந்து நாசமாகின.

இவற்றின் மதிப்பு ரூ.3 கோடி என கூறப்படுகிறது. தீப்பற்றியவுடன் பெண் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை.

மின்கசிவு காரணமாக தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பெரியகுளம் தென்கரை போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.




கழக தலைவர்–தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ராமநாதபுரம் பாக முகவர்கள் பாசறை கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கிழக்கு தொகுதி பாகமுகவர்கள் பங்கேற்பது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசிய போது எடுத்த படம். உடன் பார்வையாளர் பேரூநாளி போஸ் மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பாலசுப்பிரமணியன், சோமசுந்தரபாண்டியன், நேருபாண்டியன். வடிவேல் முருகன், ரோகினி மற்றும் திரளான கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# சூரியனைத் தேடும் சூரியகாந்திப் பூக்கள்



நமது கடற்கரை நோக்கி ஓர் கண்ணீர் ஊர்வலம் புறப்படுகிறது.
ஓ... தமிழ் சாதியின் தானைத் தலைவனே.
திருக்குவளை ஈன்ற திராவிடர்களின் தீர்க்கதரிசியே.
பெரியாரும் பேரறிஞரும் போற்றி வளர்த்த பைந்தமிழ் ஞானியே :
கிரீடங்கள் கீழே உருண்டாலும் கீர்த்திகளை இழக்காதவன் நீ!
வெண்கொற்றக் குடை வீழ்ந்தாலும், விபிடணனாகச் சரணடையாதவன் நீ!
சூறாவளியே சுழன்றடித்தாலும், கழகக் கப்பலைக் கரை சேர்த்தமீகாமன் நீ!
பூகம்பங்களே பூத்து உதிர்ந்தாலும் உன் கொள்கைகளைப் புதைத்து விட முடியாது.
எரிமலைகள் குமுறி எச்சரிக்கை செய்தாலும், உனது இலட்சியத்தை மாயான பூமியாக்க இயலாது.
நீ வீசிய முத்துக்களை வீழ்ந்து பொறுக்கிய வீரர்கள் நாங்கள்
நீ பேசிய தத்துவங்களைத் தூக்கித் திரிந்த தூதுவர்கள் நாங்கள்.
நீ செதுக்கிய சித்தாந்தங்களிலும், வேதாந்தங்களிலும், விவரம் சேகரித்த தேனீக்கள் நாங்கள்.
எங்களின் இனிய அரசனே... இராஜபாட்டையில் ஊர்வலம் வந்த இலட்சிய வேந்தே..
உன் நிசப்தம்..........அரசியல் உலகில் இருட்டை விதைத்து உள்ளது.
தேர்தலினால் தி.மு.கழகத்தை எதிரிகளால் தேய்த்து விட முடியாது.
புல்லுருவிகளால் புல்லாங்குழல் இசையைத் தடுத்துவிட முடியாது.
நீ.....கருத்துக்கள் கொட்டிய அமுதசுரபி அல்லவா!
நீ.....ஞானபிரசங்கம் செய்த வைரச் சுரங்கம் அல்லவா!
உனது எழுதுகோலுக்கு ஏன் இடுப்பு வலியை ஏற்படுத்த மறந்தாய்?
உன் மௌனத்தால் பத்திரிகைகள் எல்லாம் பாலைவனமாகவே காட்சியளிக்கிறது.
எங்களின் இதயங்களைத் திருடி நாள்தோறும் உழுது, உழுது சுயமரியாதையை விதைத்தோனே .
சூரியகாந்திகளான எங்களுக்குச் சுபிட்சம் வழங்கிய சுடரொளியாதவனே...
தறி கேட்டுத் தடுமாறி போய்விடாமல் மந்தை ஆடுகளான எங்களை மேய்த்தோனே ....
உத்தமர்களை உதறிவிட்டு ஊழல்வாதிகளுக்கு ஊஞ்சல் கட்டி உற்சவம் நடத்திய காலங்கள் எல்லாம் தமிழகத்தில்......
எதிரிகளிடமும், துரோகிகளிடமும் பாவப்பட்ட ஆடுகளாய் பலிபீடம் ஏறினோம்.
அருமை பெருமை வெற்றிகளைக் குவித்து அலெக்சாண்டரும்....
நெஞ்சம் குலையாத நெப்போலியனாய் கழகத்திற்கு இருந்தவன் நீதானே!
கழகத் தலைவனே தேர்தலில்சில காலங்களில் காயப்பட்டது. கழகம் அல்ல .தமிழகம் தானே!
இதோ பயிற்சி பெற்ற உனது படை வரிசை சிப்பாய்கள்... ஆயுதங்களை இழக்காமல் அப்படியே இருக்கிறார்கள்.
உனது வருகைக்காக விழி வாசல்களில் விளக்கேற்றித் திறந்தே வைத்திருக்கிறார்கள்..
நீ சரித்திரத்தையே சாதனையாய் செதுக்கியவன்.
உன் செல்வக்களஞ்சியத்தில் பெரியாரும், அண்ணாவும் பத்திரமாகவே பாதுகாக்கப்பட்டார்கள்.
ஆள்பவரைக் காட்டிலும் ஆளப்படும் மக்கள் முக்கியம் என முரசு கொட்டியவன் நீ!
உன் பொன் உதடுகளில் இருந்து உதிர்ந்த ஒவ்வொரு வார்த்தையும் மக்களை நோக்கியே தொலைநோக்குத் திட்டங்களாக உருவெடுத்தன.
நீ சாமானிய மக்களுக்காகச் செங்கோலைச் சுழற்றி கம்பீரமாக ஊர்வலம் வந்தவன்.
இரவிதேவனைக்கூட இரவு படுக்கையில் அயர்ந்து விடாமல் இருக்க. நாள்தோறும் உன் எழுதுகோலால் சீண்டித் துயில் எழுப்பியவன் நீ!
நீ பாலைவனத்திலும், சோழவனத்திலும் கழகக் குழந்தையைத் தூக்கி சுமந்து சுகவலி அனுபவித்த சூரியத் தாய்.
நீ இலையுதிர் காலத்தில் லட்சியத்தை மாற்றிக் கொள்ளாத இராஜாளிப் பறவை அல்லவா?
வசந்த காலத்திலும் மசக்கையா இருந்து விடாத மின்சார மனிதனின் நீ!
கொடியையும், கொள்கையையும், அடகு வைத்து கோமாளி வாழ்க்கை நடத்திய சில நட்சத்திர மனிதர்கள் மத்தியில் நீ மட்டும் பாதை மாறாத பகலவனாய் வலம் வந்தவன்....
உன்னால் முகவரி பெற்றவர்கள் தேர்தல் கள வீதிகளில் உன் மீது பூமராங் சொற்களை வீசியபோது அவைகளைப் பிடித்துக் பூச்செண்டுகளாகவே ஏற்றுக் கொண்டவன் நீ!
உன்னைக் காயப்படுத்திட துரோகிகள் வீசிய கற்களை வைத்தே அறிவாலயத்திற்கு அரண் அமைத்தவன் நீ!
நீ உன் அழுக்கு மனிதர்களை துவைத்த சலவை கல்லாகவே இருந்தாய்..
மனித மனங்களுக்கு கூர் தீட்டும் ஒரு சாணைக்கல் என்றால் அதுவும் கலைஞர் எனும் நீ தானே...
நீ எழுதுகோல் எடுத்த போதெல்லாம், எதிரிகளின் கொடுங்கோல் முறிந்து, செங்கோல் நிமிர்ந்து நின்றது.
இன்று உனக்கு தமிழ்நாடு முழுவதும் நூறாண்டு விழா எடுப்பதில் முத்துவேலரின் பேரன் முகவரி எழுதிக் கொண்டிருக்கிறார்.
இன்றோ உன் நினைவு நாள்... நாங்கள் கண்ணீரில் மிதக்கும் துயர நாள்....
ஆம்; தளபதி தலைமையில் கழகப்படை திரண்டு வருகிறது. கடற்கரை நோக்கி உனது கல்லறை நனைக்க கண்ணீர் ஊர்வலம் வருகிறது.

**கவிஞர்**
**தமிழ்தாசன்**
*தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்*





தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் கொ.வீரராகவ ராவ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில் நுட்ப மையத்தினை திறந்து வைத்தனர். இதில் மண்டலத்தலைவர்கள் இல.பத்மநாபன், கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மண்டல பயிற்சி இணை இயக்குநர் முஸ்தபா, திருப்பூர் அரசினர் தொழிற்பயிற்சி முதல்வர் பிரபு, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) தியாகராஜன், உதவி செயற்பொறியாளர் முத்துசரவணன் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.